
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dinakani.com
காலை நாளிதழ்

KANI GYM

CALL:9894808044


Vol: 02 | Issue: 240 | 4 Pages | 28.3.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 240 | 4 பக்கங்கள் | 28.3.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று**
**நிலையாமை காணப் படும்**

**விளக்கம்:**
**இருவகைப் பற்றும் அற்றபொழுதே அந்நிலை பிறவித் துன்பத்தை ஒழிக்கும், இல்லையானால் (பிறவித்துன்பம் மாறி மாறி வந்து) நிலையாமைக் காணப்படும்.**

## பூமிக்கு அடியில் 'ஏவுகணை நகரம்' போர் சூழலுக்கு மத்தியில் ஈரான் வெளியிட்ட வீடியோ



தெஹ்ரான், மார்ச்.28

ஈரானில் பூமிக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய சுரங்கத்தில், நூற்றுக்கணக்கான நவீன ரக ஏவுகணைகளை ஈரான் ராணுவம் சேமித்து வைத்துள்ளது. இந்த 'ஏவுகணை நகரம்' தொடர்பான வீடியோவை ஈரான் அரசு வெளியிட்டுள்ளது.

இந்த வீடியோ அமெரிக்கா, இஸ்ரேல் உள்பட ஈரானின் எதிரிகளாக கருதப்படும் நாடுகளுக்கு ஈரான் அரசு வெளியிட்ட எச்சரிக்கையாக பார்க்கப்படுகிறது. ஏற்கனவே இது போன்ற ஏவுகணை நகரம் மற்றும் கடற்படை சுரங்கம் தொடர்பான வீடியோவை ஈரான் வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், ஈரான் அரசு தற்போது தங்கள் ராணுவ பலத்தை வெளிக்காட்டும் 85 வினாடிகள் கொண்ட வீடியோவை வெளியிட்டுள்ளது. மேலும், இன்று தொடங்கினால் அடுத்த 2 ஆண்டுகளுக்கு, வாரத்திற்கு ஒரு ஏவுகணை நகரை உலகிற்கு அறிமுகப்படுத்துவோம் என ஈரான் கூறியுள்ளது. மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் சூழலுக்கு மத்தியில், ஈரான் அரசு வெளியிட்டுள்ள வீடியோ மேலும் பதற்றத்தை ஏற்படுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உ.பி. முதல்மந்திரி யோகி பயணித்த விமானத்தில் கோளாறு; அவசர அவசரமாக தரையிறக்கம்



லக்னோ, மார்ச்.28

உத்தரபிரதேச முதல் மந்திரி யோகி ஆதித்யநாத். இதனிடையே, மாநிலத்தில் பா.ஜ.க. ஆட்சியமைந்து 8 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி நேற்று அரசு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆக்ராவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல்மந்திரி யோகி ஆதித்யநாத்நேற்றுமாலைவிமானம்மூலம்லக்னோவுக்குபுறப்பட்டார்.

ஆக்ராவின் ஹிரியா விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட விமானம்நடுவானில்பறந்துகொண்டிருந்தது.அப்போது,விமானத்தில் திடீரெனதொழில்நுட்பகோளாறுஏற்பட்டது.இதையடுத்து,விமானம் உடனடியாக ஹிரியா விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

பின்னர், கோளாறு சரிசெய்யப்பட்டு சுமார் 2 மணிநேர தாமதத்திற்குபின் முதல்மந்திரி யோகி ஆதித்யநாத் அதே விமானத்தில் லக்னோ புறப்பட்டு சென்றார். விமானம் அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டபோது முதல்மந்திரி யோகி உள்பட யாருக்கும் எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## நிதி மந்திரி நிர்மலா சீதாராமனுடன் த.மா.கா. தலைவர் ஜி.கே. வாசன் சந்திப்பு



டெல்லி, மார்ச்.28

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. தேர்தலுக்குஇன்னும்ஓராண்டுக்குமேல்உள்ளநிலையில்தமிழ்நாட்டில் தற்போதே அரசியல் களம் சூடுபிடிக்கத்தொடங்கிவிட்டது.

தி.மு.க., அ.தி.மு.க., த.வெ.க., பா.ம.க., பா.ஜ.க., நாம் தமிழர் உள்பட பல்வேறு கட்சிகள் தேர்தலை எதிர்கொள்ள வியூகம் வகுக்கத்தொடங்கி விட்டன. கூட்டணி குறித்தும் அரசியல் கட்சிகள் தற்போதே முடிவுகளை எடுக்கத்தொடங்கி விட்டன.

இந்நிலையில், தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் இன்று டெல்லியில் மத்திய நிதி மந்திரியும், பா.ஜ.க. மூத்த தலைவருமான நிர்மலா சீதாராமனை இன்று சந்தித்தார். முன்னதாக அவர் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவை சந்தித்தார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பு மரியாதை நிமித்தமானது என்று ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, டெல்லியில் நேற்று உள்துறை மந்திரி அமித்ஷாவை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பரபரப்பான சூழ்நிலையில் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை நாளை டெல்லி செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதுக்கோட்டை: மின்சாரம் தாக்கி இறந்தவர் குடும்பத்துக்கு ரூ.3 லட்சம் நிவாரணம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை மார்ச்.28

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், வடகாடு கிராமம், பிலாபுஞ்சை பகுதியைச் சேர்ந்த ராமநாதன் என்பவரின் மகன் வீரபாண்டி (வயது 21) என்பவர்கடந்த 23.3.2025 அன்று ஆலங்குடி வட்டம்,




மாங்காடு கிராமத்தில் தனியருக்குச் சொந்தமான பலா தோட்டத்தில் பலாக் காய்கள் பறித்துக்கொண்டிருந்தபோது மேலே சென்ற மின்கம்பியிலிருந்து எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக்கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 3 லட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

## திருப்பூர் அருகே உல்லாசத்திற்கு அழைத்த பெண்.. நம்பி போனவருக்கு நம்பவே முடியாத சம்பவம்

திருப்பூர் மாவட்டம் காங்கயம் படியூர் பகுதியை சேர்ந்தவர் குமார் என்பவருக்கு ஒரு பெண்ணுடன் பழக்கம் உள்ளது, அந்தப் பெண்ணிடம் செல்போனில் குமார் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அந்த பெண் "தான் பல்லடம் அருகே உள்ள சின்னிய கவுண்டம்பாளையத்தில் தோழியுடன் தங்கியிருப்பதாகவும், அங்கு வந்தால் சந்தோஷமாக இருக்கலாம் என்று கூறினாராம்.. அதை நம்பி போனவருக்கு மறக்கவே முடியாத சம்பவம் நடந்துள்ளது.

உல்லாசமாக இருக்கலாம் என்று பெண்களை பேச வைத்து ஏமாற்றுவது அவ்வப்போது நடந்து வருகிறது. சிலர் சமூக வலைதளங்களில் ஆண்களிடம் பழகுவார்கள்.. இனிக்க இனிக்க பேசுவார்கள்.. அவர்களை நம்ப ஆரம்பிக்கும் ஆண்கள், ஜாலியாக இருக்க ஆசைப்படுகிறார்கள். அதற்காக தனியாக வரச்சொல்லுகிறார்கள்.. உண்மையில் அவர்களின் பேச்சை நம்பி போனால், அங்கு அந்த பெண்ணுடன் மேலும் சிலர் இருப்பார்கள். அவர்கள் அத்துமீறுவதை வீடியோ அல்லது புகைப்படம் எடுக்கிறார்கள்.. பின்னர் அதை வைத்து மிரட்டி பணம் பறிக்கிறார்கள். சிலர் மிரட்டி பணம் பறிக்கிறார்கள்.. திருப்பூர் மாவட்டத்தில் நடந்த சம்பவம் பற்றி பார்ப்போம். திருப்பூர் மாவட்டம் காங்கயம் படியூர் பகுதியை சேர்ந்த 49 வயதாகும் குமார் என்பவர் ஒரு பெண்ணுடன் பழகி உள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை அந்தப் பெண்ணிடம் செல்போனில் குமார் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அந்த பெண் "தான் பல்லடம் அருகே உள்ள சின்னிய கவுண்டம்பாளையத்தில் தோழியுடன் தங்கியிருப்பதாகவும், அங்கு வந்தால் சந்தோஷமாக இருக்கலாம் என்று கூறினாராம்.

இதனால் குமார் ஆசை ஆசையாய் அந்த பெண் குறிப்பிட்ட சின்னிய கவுண்டம்பாளையத்தில் உள்ள வீட்டிற்கு போனாராம். அப்போது அங்கு முகமூடி அணிந்து இருந்த மர்ம ஆசாமிகள் குமாரை கத்தியைக் காட்டி அவரை மிரட்டி அவர் அணிந்திருந்த 2 பவுன் தங்கச் செயின் மற்றும் ½ பவுன் மோதிரம் மற்றும் ரூ.3,500 பணம் ஆகியவற்றை பறித்துக்கொண்டு தப்பி சென்றனர். அப்போது தான் அவர் ஏமாற்றப்பட்டதை அறிந்து பல்லடம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். குமார் அளித்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து பல்லடம் ராயர்பாளையத்தைச் சேர்ந்த தினகரன் (45), அம்மாபாளையத்தைச் சேர்ந்த ராஜதுரை (24), ஜே.கே.ஜே. காலனியை சேர்ந்த பரத் (22), மேற்கு பல்லடத்தை சேர்ந்த துரைராஜ் (29), அதே பகுதியைச் குமார் (29), இவர்களுக்கு உறுதுணையாக இருந்த திருச்சியை சேர்ந்த தேவி (40) ஆகிய 6 பேரையும் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து தங்கநகைகள் மற்றும் பணம் பறிமுதல் செய்யப்பட்டது.



தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னை தலைமைச் செயலகத்தில் சட்டமன்றத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானிய கோரிக்கையில் காரைக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தேவகோட்டை நகராட்சியில் புதிதாக வாரச்சந்தை கட்டுவதற்கும் புதுவயல் பேரூராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கும் புதுவயல் பேரூராட்சி பேருந்து நிலையத்தை புதுப்பிப்பதற்கும் அறிவிப்பு செய்த நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே என் நேரு அவர்களை காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ் மாங்குடி அவர்கள் நேரில்சந்தித்து பொன்னாடைஅணிவித்து தொகுதி மக்கள்சார்பாகவும் நன்றியினை தெரிவித்தார்கள். உடன் காரைக்குடி மாநகர வர்த்தக காங்கிரஸ் தலைவர் ஜெயபிரகாஷ் உள்ளார்

## பள்ளி கல்வித்துறை பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கம் சார்பாக சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவு திட்டம் துவக்கம்

தமிழ்நாட்டில் உள்ள ஒன்பது மத்திய சிறை மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளியில் உள்ள எழுதப் படிக்கத் தெரியாத சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவு திட்டம் தொடங்கப் பட்டது.

மதுரை மத்திய சிறையில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் இந்த சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் துவங்கப்பட்டு 96 ஆண் சிறைவாசிகளும், பெண்கள் தனிச்சிறையில் 40 பெண் சிறைவாசிகளும் கல்வி பயின்றனர்.

தற்போது ஆறுமாத கால பயிற்சி முடிவடைந்த நிலையில் இன்று அடிப்படை எழுத்தறிவு தேர்வு மதுரை மத்திய சிறை மற்றும் பெண்கள் தனிச்சிறையில் உள்ள தேர்வு மையத்தில் நடைபெற்றது.




இத்தேர்வு மையத்தினை மதுரை சரகர் சிறைத்துறை துணை தலைவர் திரு. முருகேசன் மதுரை மத்திய சிறை கண்காணிப்பாளர் திரு. மு.சதீஷ்குமார், தொடக்க கல்வி அலுவலர் கணேசன். ஒருங்கிணைப்பாளர் திரு. ஜெரால்டு ஆகியோர் பார்வையிட்டு தேர்வினை துவக்கி வைத்தனர்

## பராமரிப்பு பணியையொட்டி லோயர் கேம்ப் மின் உற்பத்தி நிலையத்தில் மின் உற்பத்தி நிறுத்தம்

கூடலூர் அருகே உள்ள லோயர் கேம்ப் மின் நிலையத்தில் பராமரிப்பு பணியையொட்டி மின் உற்பத்தி நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

தேனி மாவட்டம் கூடலூர் அருகே லோயர் கேம்பில் நீர் மின் உற்பத்தி நிலையம் அமைந்துள்ளது .இங்கு முல்லைப் பெரியாறு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் 4 ராட்சத குழாய்கள் மூலம் கொண்டுவரப்பட்ட மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.. இங்கு அமைக்கப்பட்டிருக்கும் 4 ஜெனரேட்டர்களில் ஒவ்வொரு ஜெனரேட்டர்களும் வினாடிக்கு 42 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது .இதில் ஒரு ஜெனரேட்டருக்கு வினாடிக்கு 450 கன அடி வீதம் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் ... முல்லைப் பெரியாறு அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவைப் பொறுத்து ஜெனரேட்டர்கள் இயக்கப்பட்டு வருகின்றன ..தற்போது இப்பகுதியில் இரண்டாம் போக நெல் அறுவடை பணிகள் நடைபெற்று வருகிறது... இதனால் பாசனத்திற்கு தண்ணீர் தேவை இல்லாத சூழ்நிலை உள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு ஆண்டுதோறும் மார்ச்,ஏப்ரல், மே ஆகிய மூன்று மாதங்களுக்கு லோயர் கேம்பில் மின் உற்பத்தி நிலையத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெறுவது வழக்கம்.அதன்படி இந்த ஆண்டுக்கான பராமரிப்பு பணி நேற்று முன்தினம் தொடங்கியது இதை அடுத்து மின் உற்பத்தி நிறுத்தம் செய்யப்பட்டது ...



நேற்றைய நிலவரப்படி முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 113 அடி ஆகும்.. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 127 கன அடியாக இருந்தது .அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. குடிநீர் தேவைக்காக மட்டும் இரைச்சல்பாலம் வழியாக வினாடிக்கு 105 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

## விவசாய கண்காட்சி நடத்திய தோட்டக்கலை கல்லூரி மாணவர்கள்

தேனி மாவட்டம், பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவர்களான மா.பாலாஜி, மூ.பரணிதரன், இரா.பாரதி சங்கர், ம.பூபாலன், ரா.ஸ்ரீ. சாருதத், மா.தானேஷ்வரன், மு.தினேஷ், வெ.ஸ்ரீ. தினேஷ், தி.ஜெகன் ராஜ், றோ.ஜெனின் ஆகியோர் தங்களது ஊரக தோட்டக்கலை பணி அனுபவ திட்டத்தின் அங்கமாக விவசாயிகளுக்கு பல்வேறு விவசாய உள்ளீடுகள் மற்றும் பொறிகளைக் காட்சிப் படுத்தினர். இக்கண்காட்சியானது தேனி வட்டார மல்லையகவுண்டன்பட்டி கிராமத்தில் தோட்டக்கலை கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் தேனி வட்டார துணை தோட்டக்கலை அலுவலர்,



உதவி தோட்டக்கலை அலுவலர் முன்னிலையில் நடைப்பெற்றது. இக்கண்காட்சியில், உயிர் உரங்கள் (அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, டிரைக்கோடெர்மா, சூடோமோனாஸ், பேசிலஸ்), இனகவர்ச்சி பொறிகள், மஞ்சள் மற்றும் நீல ஒட்டுப்பெறிகள், தேனீபெட்டி, காய்கறி நுண்ணூட்ட கலவை, உயிர் பூஞ்சை கொல்லி, மற்றும் உழவர் உற்பத்தியாளர் சங்கத்தின் மதிப்பு கூட்டப்பட்ட பல்வேறு பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டன. இவ்வுள்ளீடுகளின் செயல்விளக்கம் மற்றும் முக்கியத்துவத்தினைக் கலந்துக்கொண்ட விவசாய பெருமக்களுக்கு மாணவர்கள் விளக்கினர். கண்காட்சியில் பல்வேறு விவசாய பெருமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# மத்திய அரசுக்கு எதிராக தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. ஆர்ப்பாட்டம் அறிவிப்பு

சென்னை, மார்ச்.28

தி.மு.க. பொதுச்செயலாளர் துரை முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு முதல்அமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் தலைமையில், 09032025 அன்று காலை, சென்னை, அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் நடைபெற்ற "தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில்" கழக மக்களவை மாநிலங்களவை உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும்போது, "தமிழ்நாடு மாநில நலன் குறித்து கேள்விகள் எழுப்பி, அதற்குரிய பதிலை மத்திய அரசிடம் பெற வேண்டும்" என்றும்; அத்துடன் 'மத்திய அரசு கடந்த நான்கரை மாதங்களாக தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4,034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட(MGNREGA) நிதியை வழங்காதது' குறித்து கேள்வி எழுப்பிட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, "மத்திய அரசு கடந்த நான்கரை மாதங்களாக தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4,034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட(MGNREGA) நிதியை வழங்காதது குறித்து 25.03.2025 அன்று தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பிய போது, அதற்கு எவ்வித பதிலையும் தராமலும் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4,034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட (MGNREGA) நிதியை வழங்காமலும், மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் மத்திய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் 29.3.2025 சனிக்கிழமை அன்று காலை அனைத்து கழக ஒன்றியங்களிலும் தலா இரண்டு அனுமதிக்கப்பட்ட இடங்களில் 100 நாள் வேலை வாய்ப்பால் பயன்பெறுவோரைத் திரட்டி "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்"நடைபெறும்.

மாவட்டக் கழக நிர்வாகிகள் கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில், கழக முன்னணியினர் முன்னிலையில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, மத்திய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்கின்ற வகையில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்து, தமிழ்நாடு அரசை வஞ்சிக்கும் மத்திய பாசிச பா.ஜ.க. அரசுக்குதங்கள்கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தத்தமது மாவட்டங்களில் நடைபெறும் ஆர்ப்பாட்டம் குறித்த விவரத்தை தலைமைக் கழகத்திற்கு உடனே தெரிவித்திட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 3 வழித்தடங்களில் மித அதிவேக ரெயில் சேவை: டெண்டர் வெளியிட்டது மெட்ரோ ரெயில் நிறுவனம்



சென்னை, மார்ச்.28

தமிழக அரசின் 202526ம் ஆண்டிற்கான பட்ஜெட்டை, சட்டசபையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கடந்த 14ம் தேதி தாக்கல் செய்தார். அதில் அரசு ஊழியர்கள், பெண்கள் என பல்வேறு தரப்பினருக்கும் சலுகைகள் அறிவிக்கப்பட்டன.

தமிழ்நாட்டில், மணிக்கு 160 கிலோ மீட்டர் வேகத்தில் இயங்கும் மித அதிவேக ரெயில்வே சேவையை சென்னை செங்கல்பட்டு திண்டிவனம் விழுப்புரம் வரை167கிலோமீட்டருக்கும், சென்னை காஞ்சீபுரம் வேலூர் வரை 140 கிலோ மீட்டருக்கும், கோவை திருப்பூர் ஈரோடு சேலம் வரை 185 கிலோ மீட்டருக்கும் வழித்தடங்கள் உருவாக்கிட தேவையான விரிவான சாத்தியக் கூறு ஆய்வுகள் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, பட்ஜெட் அறிவிப்பின்படி, சென்னை செங்கல்பட்டு திண்டிவனம் விழுப்புரம் மற்றும் சென்னை காஞ்சிபுரம் வேலூர் மற்றும் கோவை திருப்பூர் ஈரோடு சேலம் ஆகிய 3 வழித்தடங்களில், மித அதிவேக ரெயில் சேவையை (RRTS) உருவாக்கிட, விரிவான சாத்தியக் கூறு அறிக்கையை தயார் செய்வதற்கான டெண்டரை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

மணிக்கு அதிகபட்சம் 160 கி.மீ வேகத்தில் ரெயில் செல்லும் வகையிலான, ஆர்.ஆர்.டி.எஸ். போக்குவரத்து டெல்லி மீரட் இடையே செயல்பாட்டில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஒசூர் அருகே 7,525 லிட்டர் எரிசாராயம் பறிமுதல்: லாரி ஓட்டுநர்கள் கைது




ஒசூர், மார்ச்.28

அமலாக்கப் பிரிவு புலனாய்வு துறை மாநிலம் முழுவதும் சட்ட விரோத மதுபான வர்த்தகத்தை கட்டுப்படுத்த தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அமலாக்கப்பிரிவு புலனாய்வுதுறைதமிழகத்தில் போலி மதுபான வர்த்தகத்தை கட்டுப்படுத்த தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தை மிகவும் உறுதியாக அமல்படுத்தி வருகிறது.

முதன்மையாக போலி மதுபானம் தயாரிக்கும் கூடங்கள், எரிசாராயம் கடத்தல்கள், சட்ட விரோதமாக மதுபானம் தயாரிக்கும் கூடங்கள், பிற மாநில மதுபானங்கள் கடத்தல்களை தடுக்க தொடர் கண்காணிப்பு மற்றும் வேட்டைகள் நடத்தி வருகிறது.

அமலாக்கப்பிரிவு புலனாய்வு துறை தற்போது மிக நுணுக்கமான நுண்ணறிவு தகவல்களை சேகரித்து உடனடி மற்றும் தொடர்நடவடிக்கை எடுத்துவருகிறது. சமீபத்தில் கோயம்புத்தூர் மத்திய புலனாய்வு பிரிவு குழுவினரால் கோயம்புத்தூர் சூலூரில் உள்ள ஒரு குடோனில் பதுக்கி வைத்திருந்த 5,145 லிட்டர் எரிசாராயம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, கோயம்புத்தூர் மண்டல மத்திய நுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் தலைமையிலான குழு, கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் தர்கா அருகே ஒரு லாரியை வழிமறித்து சோதனை செய்தபோது 35 லிட்டர் கொள்ளளவு கொண்ட 215வெள்ளைநிறகேனில், 7,525 லிட்டர் எரிசாராயம் கடத்திவரப்பட்டத்தை கண்டுபிடித்தனர். லாரி மற்றும் கடத்தல் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, இரண்டு ஓட்டுநர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதுதொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில், இந்த எரிசாராயம் கர்நாடகா மாநிலம் தார்வட்த்தியிலிருந்து பாலக்காடு கேரளாவுக்கு கடத்திவரப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த எரிசாராயம் கள்ளில் கலக்கும் நோக்கத்துடன் கடத்திவரப்பட்டதாக தெரியவருகிறது. இந்த செயல்பாட்டின் முக்கிய மூளையாக செயல்பட்டவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரை கைது செய்ய தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளது. மதுபானத்தை கடத்த உதவிய லாரி ஓட்டுநரும் கைது செய்யப்பட்டார்.

இதுபோன்ற சட்டவிரோத மதுபான வர்த்தகங்களை தடுக்கும் நோக்கில், துறை தொடர்ந்து கடுமையான கண்காணிப்பை மேற்கொண்டு வருகிறது. பொது மக்கள் சட்டவிரோத மதுபான வர்த்தகம் தொடர்பான தகவல்களை இலவச தொலைபேசி எண்.

10581 அல்லது CUG எண். 9498410581 என்ற எண்ணிற்கு தகவல் வழங்கலாம். வழங்கப்படும் அனைத்து தகவல்களும் முழுமையாக ரகசியமாக பாதுகாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தங்கக் கட்டிகள் கொள்ளையடிக்கப்பட்ட வழக்கில் 22 ஆண்டுக்கு பின் தீர்ப்பு



கோவை, மார்ச்.28

கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியை சேர்ந்தவர் டி.ஆர்.பாலாஜி. நகை வியாபாரி. இவர், வடமாநிலங்களில் இருந்து தங்க கட்டிகளை வாங்கி வந்து, கோவையில் நகையாக வடிவமைத்து, மீண்டும் வடமாநிலங்களுக்கு அனுப்பி வைக்கும் தொழில் செய்து வருகிறார். அவர், கடந்த 6.2.2003 அன்று இரவு சுமார் 8 மணியளவில், 2 கிலோ 150 கிராம் எடை கொண்ட தங்க நகைகளை ஒரு பையில் வைத்துக் கொண்டு, கோவை ரெயில்நிலையத்தை நோக்கி குட்ஷெட் ரோட்டில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது, அவரை பின்தொடர்ந்து வந்த ஒரு கும்பல், திடீரென வழமறித்து கத்தி முனையில் சரமாரியாக தாக்கி 2 கிலோ நகையை கொள்ளையடித்து விட்டு தப்பி சென்றனர். இதுதொடர்பாக வெரைட்டிஹால் ரோடு போலீசார், வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி கோவை செல்வபுரம் பொன் னையராஜபுரத்தை சேர்ந்த வெங்கடேசன், ரவிசங்கர், மோகன்ராஜ், பத்மநாபன், ஆர்.முருகன், ஜாவித், உஸ்மான் மொய்தீன், விஸ்வநாதன், ஸ்ரீராம், எம்.முருகன் ஆகிய 10 பேரை கைது செய்தனர்.

அவர்களிடம் இருந்து நகைகளையும், வழிப்பறி செய்ய பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் மற்றும் கத்தி உள்ளிட்ட ஆயுதங்களையும் பறிமுதல் செய்தனர். இந்த வழக்கு விசாரணை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நடந்து வந்தது. வழக்கு விசாரணையின்போது ஜாவித், ஸ்ரீராம் ஆகியோர் இறந்துவிட்டனர். இதனால் மற்ற 8 பேர் மீதான வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்றது.

இந்த நிலையில், இந்த வழக்கு நேற்று நீதிபதி கலைவாணி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது 8 பேருக்கு 5 ஆண்டு சிறைதண்டனையும், தலா ரூ.1000 அபராதமும் விதித்து நேற்று தீர்ப்பு கூறினார். இதையடுத்து 8 பேரும் போலீஸ் காவலுடன் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த வழக்கில் அரசு தரப்பில் வக்கீல் கிருஷ்ணமூர்த்தி ஆஜராகி வாதாடினார்.

# காதல் விவகாரம்: சிறுமி மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைப்பு-தூத்துக்குடியில் அதிர்ச்சி சம்பவம்



தூத்துக்குடி மார்ச்.28

தூக்குத்துடி மாவட்டம் எட்டயபுரம் அருகே உள்ள கீழநம்பிபுரத்தைச் சேர்ந்தவர் அய்யனார். இவரது மனைவி காளியம்மாள். இந்த தம்பதிக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். இவர்களது 17 வயது மகளும், பரமக்குடி பகுதியைச் சேர்ந்த சந்தோஷ் என்பவரும் காதலித்து வந்துள்ளனர். இதுகுறித்து அறிந்த அய்யனாரும், அவரது மனைவியும் தங்களது மகளை கண்டித்துள்ளனர். இதையடுத்து சிறுமி, அவருடன் பேசுவதை தவிர்த்துள்ளார்.

மேலும் சிறுமியை அவரது பாட்டி வீட்டுக்கு, பெற்றோர் அனுப்பி வைத்தனர்.

இந்த நிலையில் கடந்த 23ம்தேதி அங்கு வந்த 2 இளைஞர்கள் சிறுமி மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்தனர். உயிருக்கு போராடிய சிறுமி மீட்கப்பட்டு தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மருத்துவமனையில் சிறுமி அளித்த வாக்குமூலத்தில், அவரை கொலை செய்ய முயன்றது பரமக்குடியை சேர்ந்த சந்தோஷ் மற்றும் அவரது நண்பர் முத்தையா என்பது தெரியவந்தது.

இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்த எட்டயபுரம் போலீசார் சந்தோஷ், முத்தையா இருவரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஆசிரியர் பணி நிறைவு மற்றும் பாராட்டு விழா



திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஒன்றியம் பாமணி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ஆசிரியர் ஓய்வு பாராட்டு விழா , விளையாட்டு விழா மற்றும் ஆண்டு விழா நடைபெற்றது. தலைமை ஆசிரியர் கிரிஜா தலைமை வகித்து ஆண்டு அறிக்கை வாசித்தார் ஆசிரியை மீரா வரவேற்றார். ஆண்டு விழாவில் விளையாட்டு போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பிக்க ப்பட்டது.

இந்த விழாவில் வட்டார கல்வி அலுவலர் அறிவழகன், பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள் , பணி ஓய்வு ஆசிரியர் அவரது குடும்பத்தினர் மற்றும் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர், உறுப்பினர்கள் பல்வேறு பள்ளி|ஆசிரியர்கள், வட்டார மேற்பார்வையாளர் அனுப்பிரியா, ராய்டிரஸ்ட் இன்டர்நேஷனல் நிறுவனத் தலைவர் முனைவர் துரை ராயப்பன், அன்புள்ளங்கள் அறக்கட்டளை ராஜாமணி, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் ஓய்வு பழனியப்பன் ,ராஜம் பிரிண்டர்ஸ் ரவிக்குமார் ,இல்லம் தேடி கல்வி தன்னார்வலர்கள் ரேவதி ,பாலா அபி ஆகியோர் கலந்து கொண்டனர்.

வட்டார கல்வி அலுவலர் அறிவழகன் வாழ்த்தி பேசும் போது ஆசிரியப் பணியில் 26 ஆண்டு காலம் பணிபுரிந்து ஓய்வு பெறும் ஆசிரியர் பாஸ்கரன் பள்ளியின் வளர்ச்சியில் மிக முக்கிய பங்காற்றியதாக வாழ்த்தி பேசினார். ராய் டிரஸ்ட் நிறுவனர் முனைவர் துரை ராயப்பன் பேசும் பொழுது எளிமையின் உருவமாக திகழ்ந்த ஆசிரியர்பாஸ்கர்மிக மிக எளிமையாகவும், பள்ளியின் வளர்ச்சிக்கு முக்கிய தூணாக விளங்கியதாக பாராட்டி பேசினார்.

ஆசிரியர் அவர்களுக்கு குடும்பத்தினர் சார்பாக கணையாழி அணிவிக்கப்பட்டது . ஆசிரியர்கள் நண்பர்கள் மூலம் வாழ்த்து மடலும், வாழ்த்துரையும் வழங்கி சிறப்பிக்க பட்டது.

சிறப்பாக நடைபெற்ற இந்த விழாவில் ஆசிரியரை பாராட்டி பலர் வாழ்த்தி பேசினர். நிகழ்வில் பள்ளி மாணவர்கள் பொதுமக்கள் என முன்னூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .

பள்ளியின் சார்பாக நினைவு பரிசு ஓய்வு பெற்ற ஆசிரியர் பாஸ்கர் அவர்களுக்கு வழங்கப்பட்டது . ஆசிரியை மலர்விழி நன்றி கூற விழா இனிதே நிறைவு பெற்றது.

# என்கவுன்ட்டர் குறித்து போலீஸ் கமிஷனர் கூறிய திடுக்கிடும் தகவல்கள்



சென்னை, மார்ச்.28

சென்னையில் செயின் பறிப்பு சம்பவங்களில் ஈடுபட்ட குலாம் என்ற நபர் என்கவுன்ட்டரில் சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பாக மாநகரகாவல் ஆணையர் அருண் பல்வேறு திடுக்கிடும் தகவல்களை கூறினார். இது குறித்து அவர் கூறியதாவது,

சென்னையில் செயின் பறிப்பில் ஈடுபட்ட 3 பேரும் இரானி கொள்ளையர்கள். கொள்ளையர்கள் பறித்துச் சென்ற செயின்கள் அனைத்தும் மீட்கப்பட்டுள்ளன. பிடிபட்ட கொள்ளையர்கள் மீது நாடு முழுவதும் 50க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இந்த கொள்ளை சம்பவத்தில் உள்ளூர் நபர்களுக்குத் தொடர்பு இல்லை. குற்றம் நடந்த 3 மணி நேரத்தில் கொள்ளையர்கள் கைது. சிசிடிவி காட்சிகளை வைத்தே குற்றவாளிகளைப் பிடித்தோம். விமானத்தை நிறுத்தி வைத்து, அதிலிருந்து குற்றவாளிகளைக் கைது செய்தோம். உடைகளை மாற்றியுள்ளனர், ஆனால் ஷூக்களை மாற்றவில்லை, அதை வைத்து கண்டு பிடித்தோம் தேடப்படும் குற்றவாளிகளில் டாப் 3ல் குற்றவாளி ஜாபர் இருந்தார்.

மோட்டார் சைக்கிளை பறிமுதல் செய்ய கைதானவர்களை அழைத்துச் சென்றபோது என்கவுன்ட்டர் நடந்துள்ளது. சுட்டுக்கொல்லப்பட்ட குலாம் 2 ரவுன்ட் சுட்டது, போலீஸ் வாகனத்தில் பட்டது. தற்காப்புக்காக போலீஸ் ஒரு முறை சுட்டனர். தற்காப்பு நடவடிக்கையாக என்கவுன்டர் நடந்தது.

# குழந்தைகளை மற்ற குழந்தைகளுடன் ஒப்பிட்டு பேசாதீர்கள் பெற்றோர்களுக்கு நகர் மன்த் தலைவர் வேண்டுகோள்



திருத்துறைப்பூண்டி தி மாடர்ன் நர்சரி பிரைமரி பள்ளியின்19வது ஆண்டு விழா மற்றும் 12 வது பட்டமளிப்பு விழா நேற்று திருத்துறைப்பூண்டி கல்யாண மண்டபத்தில் வெகு சீறும் சிறப்புமாக நடைபெற்றது. பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் நூலகர் ஆசைத்தம்பி தலைமை தாங்கினார். வட்டார கல்வி அலுவலர் அறிவழகன், நகர்மன்ற உறுப்பினர் மின்னல்கொடி பாலகிருஷ்ணன் , ராய் டிரஸ்ட் நிறுவனத் தலைவர்முனைவர்துரை ராயப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆலோசனைக்குழு உறுப்பினர் பொறியாளர் செல்வகணபதி, கூட்டுறவுத்துறை இணை பதிவாளர் பிரபா ஜவஹர்,பாரத மாதா தொண்டு நிறுவனங்களின் நிறுவனர் எடையூர் மணிமாறன் ஆகியோர் போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு பரிசளித்து சிறப்புரையாற்றினர். விழாவில் 50 யு கே ஜி மாணவர்களுக்கு பட்டமளித்து நகர் மன்றத்தலைவர் திருமதி. கவிதாபாண்டியன் பேசும் போது " பெற்றோர்கள் தனது குழந்தைகளுடன் மற்ற குழந்தைகளை ஒப்பிட்டு பேச கூடாது. ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு திறமையுடன் பிறக்கின்றனர். நாம் நம் குழதைகளுக்கு பொது இடங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என வழிகாட்ட வேண்டும். நீங்கள் செய்வதை அப்படியே பின்பற்ற நினைக்கும் குழந்தைகளுக்கு நாம் சரியான முறையில் வாழ்ந்து காட்ட வேண்டும் என்றார். முன்னாள் ரோட்டரி சங்கத்தின் தலைவர் காளிதாஸ், லயன்ஸ் சங்க செயலாளர் பாலகிருஷ்ணன், பொருளாளர் ரகுராமன், பெற்றோர் ஆசிரியர்கழக துணைத் தலைவர் விஜயராஜ், பொருளாளர் மேஜிக்அகிலன்,கராத்தே முத்துக்குமார், மு.நகர்மன்ற உறுப்பினர் மாயா, நேஷனல் பள்ளி தாளாளர் விவேகானந்தன், பள்ளி புரவலர்கள் கார்த்திகா அருள், மெஸ்சி விஜய பாஸ்கர், ஆசிரியர்கள் ஹேமா அருளரசு ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். பள்ளி முதல்வர் தீபா ராணி வரவேற்பு உரையாற்றினர். ஆனந்தம் கல்வி அறக்கட்டளை துணைத் தலைவர் ஆசிரியர் மணிமலர் நன்றியுரையா ற்றினார்.

ஆனந்தம் கல்வி அறக்கட்டளை நிறுவனர் முருகானந்தம் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். பள்ளி ஆசிரியைகள் வீர குமாரி, திவ்யா, அபிராமி ஆகியோர் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தனர்.

# மணிமுத்தாறு அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி




நெல்லை, மார்ச்.28

நெல்லை மாவட்டம் அம்பை அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள மணிமுத்தாறு அருவி மிகவும் பிரசித்தி பெற்றதாகும். ஆண்டு முழுவதும் தண்ணீர் விழும் இந்த அருவியில் ஏராளமான சுற்றுலா பயணிகள் உற்சாகமாக குளித்து மகிழ்வது வழக்கம். இந்த நிலையில், நெல்லை மாவட்டத்தில் பெய்த கன மழை காரணமாக மணிமுத்தாறு அருவிக்கான நீர்வரத்து அதிகரித்தது. இதன் காரணமாக சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி அருவியில் குளிக்க தடை விதித்து வனத்துறை உத்தரவிட்டது. இந்த நிலையில், மணிமுத்தாறு அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மணிமுத்தாறு அருவியில் நீர்வரத்து சீரானதால், 4 நாட்களுக்கு பிறகு சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## ஆன்லைனில் முன்பதிவு செய்யும் பயணிகளுக்கு சிறப்பு கோடை கால சலுகையாக 75 நபர்களுக்கு இலவச பயணம்: அரசு போக்குவரத்து கழகம் அறிவிப்பு




சென்னை, மார்ச்.28
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் வெளியிட்ட அறிக்கை; தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தொலைதூர பயணம் மேற்கொள்ளும் பயணிகள் பயணச்சீட்டுகளை எளிதாக முன்பதிவு செய்யும்வகையில், ஆன்லைன் மூலம் பயணச்சீட்டு முன்பதிவு முறை உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது, https://www.tnstc.in, மற்றும் TNSTC Mobile App வழியாக செயல்படுகிறது.

முன்பதிவு செய்யும் பயணிகளுக்கு மாதாந்திர குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்தாண்டு கோடை காலத்திற்காக ஒரு சிறப்பு குலுக்கல் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முன்புதிவு செய்து, 01/04/2025 முதல் 15/06/2025 வரை பயணம் செய்யும் 75 பயணிகள் சிறப்பு குலுக்கல் முறையில், தேர்வு செய்யப்பட்டு இலவச பயண சலுகை வழங்கப்படும்.

முதல்பரிசு: தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழப்பேருந்துகளில் முன்பதிவு வசதியுள்ள அனைத்து வகை பேருந்துகளிலும் முன்பதிவு செய்து ஒரு வருடத்திற்கு 20 முறை பயணம் செய்பவர்களுக்கு இலவச பயணம் (01/07/2025 முதல் 30/06/2026 வரை)

2ம் பரிசு: அனைத்து வகை பேருந்துகளிலும் முன்பதிவு செய்து ஒரு வருடத்திற்கு 10 முறை இலவச பயணம் (01/07/2025 முதல் 30/06/2026 )

3ம்பரிசு: அனைத்து வகை பேருந்துகளிலும் முன்பதிவு செய்து ஒரு வருடத்திற்கு 5 முறை இலவச பயணம் (01/07/2025 முதல் 30/06/2026 )

எனவே பொதுமக்கள், அரசு விரைவு பேருந்துகளில் முன்பதிவு செய்து, கடைசி நேர சிரமங்களை தவிர்த்து எளிதாக பயணம் செய்யவும். சிறப்பு பரிசுகளை வெல்லவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## இந்தாண்டு கோடை மின்தேவை 22,000 மெகாவாட் கோடைகாலத்தில் தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கை: அமைச்சர் செந்தில் பாலாஜி தகவல்




சென்னை, மார்ச்.28
சென்னை அண்ணாசாலையில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைமை அலுவலகத்தில், எதிர்வரும் கோடை காலத்தில் தமிழ்நாடு முழுவதும் தடையில்லா மற்றும் சீரான மின்சார விநியோகத்தை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு நடவடிக்கைகள் குறித்து மின்சாரம்,

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி அனைத்து தலைமை பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வை பொறியாளர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார். மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் உச்சபட்ச மின் தேவை முறையே 19,500 மெகாவாட், 21,943 மெகாவாட் மற்றும் 22,079 மெகாவாட் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வாரியத்தின் சொந்த மின் உற்பத்தி நிலையங்களில் முழுத்திறனுடன் மின்சாரம் உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கோடை வெயிலின் தாக்கத்தால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களை தவிர்க்கும் வகையில் தடையில்லா மற்றும் சீரான மின் விநியோகத்தை உறுதி செய்ய, அனைத்து துணை மின் நிலையங்களிலும் வரும் ஏப்ரல் 30ம் தேதி வரை மாதாந்திர பராமரிப்பு பணிகளுக்காக மின் நிறுத்தம் செய்யவேண்டாம் என தலைமைப் பொறியாளர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார். இந்த ஆய்வுக்கூட்டத்தில்,தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராதாகிருஷ்ணன், அனைத்து மேலாண்மை இயக்குநர்கள், இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் வருமானவரி செலுத்துவதில் முறைகேடு: தொடர் விசாரணை நடைபெறுகிறது




சென்னை, மார்ச்.28
தமிழ்நாடு வருமான வரித்துறை கூடுதல் கமிஷனர் ஜனார்த்தனன் வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் உள்ள பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வருமான வரி செலுத்துவதில் முறைகேடு செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. போலி ரசீதுகள் பல பான் எண்களுக்கு பயன்படுத்தப்பட்டு உள்ளது. பல ஊழியர்கள் கல்வி கடன், தனிநபர் கடன் வாங்கியதாக கூறி அதற்கு வட்டி செலுத்துவதாக கூறி பல லட்சம் ரூபாயை விலக்காக கோரி உள்ளனர்.

இதுபோன்ற போலியான கோரிக்கைகளும் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன. வீட்டு உரிமையாளரின் பெயரில் போலியான வாடகை ரசீதுகளை ஊழியர்களுக்கு வருமான வரி ஆலோசகர்கள் வாங்கி கொடுத்துள்ளனர். இந்த விசாரணையில் பல்வேறு டாக்டர்களின் பெயரில் போலி மருத்துவ சான்றிதழ்கள், ரசீதுகளை தயார் செய்திருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. அதுபோல் மின்சார வாகனத்தை கடன் மூலம் வாங்கியதாகவும் அதற்கு வட்டி கட்டுவதாக கூறி சில ஊழியர்கள் வரி விலக்கிற்கு தவறாக கோரி உள்ளனர்.

வரி செலுத்துவதற்கு போலியான காரணங்களைதெரிவித்திருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. பொதுத்துறை நிறுவனங்களில்திருச்சி பி.எச்.இ.எல்., படைக்கலன் தொழிற்சாலை நிறுவனம், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், நெல்லை மாவட்ட கோர்ட்டு ஊழியர்களும், பெருநிறுவனங்களின் ஊழியர்களும் பல்வேறு தனியார் நிறுவனங்களும் இந்த வரி மோசடியில் ஈடுபட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து விசாரணை நடக்கிறது.

## புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு அங்கீகாரம் தரப்பட வேண்டும்: அமைச்சர் கோவி.செழியன் வலியுறுத்தல்



சென்னை, மார்ச்.28
சென்னை அறிவியல் நகரம் சார்பில் பி.எம்.பிர்லா கோளரங்க வளாகத்தில், நடைபெற்ற அறிவியல் விழா நிகழ்ச்சியில் உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது, ஊரக கண்டுபிடிப்பாளர் விருது மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் உயர்கல்வித் துறைக்கு தேர்தெடுக்கப்பட்ட 50 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கினார். நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியதாவது: சென்னை அறிவியல் விழாவிற்கு ஒவ்வொரு ஆண்டும் மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

சிறந்த அறிவியல் ஆசிரியர்களை கண்டறிந்து சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது. ரூ.25,000 பரிசு தொகையும் சான்றிதழும் வழங்கப்படுகிறது. கிராமப்புற மக்கள் பெரும்பான்மையானவர்கள் கல்வி மற்றும் தொழில்நுட்பத்தை முறையாகப் படிக்கவில்லை என்றாலும், பல புதுமையான தொழில்நுட்பங்களை கண்டுபிடித்துள்ளனர். அவர்களது படைப்பாற்றல் வாயிலாக தேவைக்கேற்ற பல அரிய கண்டுபிடிப்புகள் விவசாயப் பணிகளுக்கும், சமுதாயத்தின் நன்மைக்காகவும் பயன்பட்டு வருகிறது. இத்தகைய கண்டுபிடிப்புகளை முறையாக அங்கீகரிக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் இரு சிறந்த கண்டுபிடிப்பாளர்களுக்கு தலா ரூ. 1,00,000 பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

அறிவியல் கண்டுபிடிப்புகளும் அறிவியல் ஆய்வுகளும் மென்மேலும் மாணவர்களால் நிகழ்த்தப்பட வேண்டும். நமது தமிழ்நாடு அறிவியலில் உலகில் முதல் இடத்தைப் பிடிக்க வேண்டும். இவ்வாறு அமைச்சர் கூறினார். இந்நிகழ்ச்சிக்கு அறிவியல் நகரம் முதன்மைச் செயலாளர், துணைத் தலைவர் தேவ் ராஜ்தேவ், உயர்கல்வித் துறை செயலாளர் சமயமூர்த்தி ஆகியோர் தலைமை வகித்தனர்.

மேலும், கல்லூரி கல்வி ஆணையர் சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி இயக்கக ஆணையர் இன்னசென்ட் திவ்யா, தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்ற துணைத் தலைவர் விஜயகுமார் (ஓய்வு) ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சாலை விபத்தில் உயிரிழந்த எஸ்.ஐ குடும்பத்துக்கு ரூ.30 லட்சம் நிதியுதவி: முதல்வர் மு.க ஸ்டாலின் உத்தரவு



சென்னை, மார்ச்.28
முதல்வர்மு.கஸ்டாலின் வெளியிட்ட இரங்கல் செய்தி: விழுப்புரம் மாவட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்துவந்த தமிழ்ச்செல்வன் (வயது 57) என்பவர் 13.3.2025 அன்று பணியின் நிமித்தமாக இருசக்கர வாகனத்தில் மாவட்ட காவல் அலுவலகம் எதிரில் சென்றுகொண்டிருந்த போது எதிர்பாராதவிதமாகநான்குசக்கரவாகனம் மோதிய விபத்தில் பலத்த காயமடைந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி 24.3.2025 அன்று மாலை உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன். சிறப்பு உதவி ஆய்வாளர் தமிழ்ச்செல்வன் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். தமிழ்ச்செல்வனை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு முப்பது லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

## அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு ஏப்ரல் 2ம் தேதி சம்பளம்: தமிழக அரசு அறிவிப்பு




சென்னை, மார்ச்.28
அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு ஏப்ரல் 2ம் தேதி சம்பளம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழக அரசின் கீழ் பணிபுரியும் சுமார் 9.30 லட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், 7.05 லட்சம் ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள் ஆகியோரது மார்ச் மாத சம்பளம் மற்றும் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் ஆகியவை இந்த ஆண்டு ஏப்ரல் 1 அன்று வருடாந்திர கணக்குமுடிவுகாரணமாக வங்கிகளுக்கு விடுமுறை என்பதால், பணியாளர் மற்றும் ஓய்வூதியர்களின் வங்கி கணக்கில் 02.04.2025 வரவு வைக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பைக்கில் கொண்டு சென்ற பெட்ரோல் தீப்பிடித்து உடலில் பற்றி வாலிபர் சாவு



கோபால்பட்டி, மார்ச்.28
திண்டுக்கல் மாவட்டம், கோபால்பட்டி அருகே கொரசினம்பட்டியை சேர்ந்தவர்கள் பத்மநாபன் (18) மற்றும் 17 வயது சிறுவன். இவர்கள் நேற்று முன்தினம் மாலை டூவீலரில் கோபால்பட்டி சென்றுவிட்டு பிளாஸ்டிக் கேனில் பெட்ரோல் வாங்கி கொண்டு மீண்டும் ஊருக்கு வந்து கொண்டிருந்தனர். டூவீலரை பத்மநாபன் ஓட்ட, சிறுவன் பின்னால் அமர்ந்து கொண்டு பெட்ரோல் கேனை கையில் பிடித்து கொண்டு வந்து கொண்டிருந்தார்.

நத்தம் சாலையில் கணவாய் பட்டி பங்களா பகுதியில் வந்தபோது சாலையின் குறுக்கே சென்ற சிறுவன் மீது டூவீலர் மோதியது. அப்போது பெட்ரோல் கேன் கீழே விழுந்து தீப்பற்றியதில் தீ, டூவீலர் மீதும் மற்றும் பத்மநாபன், பின்னால் அமர்ந்த சிறுவன் மீதும் பற்றி கொண்டது. தீக்காயமடைந்த இருவரையும் அங்கிருந்தவர்கள் மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் செல்லும் வழியிலே பத்மநாபன் உயிரிழந்தார். குறுக்கே வந்த சிறுவன் லேசான காயமடைந்து சிகிச்சைக்காக திண்டுக்கல்லில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிப்பட்டுள்ளார்.

## எட்டயபுரத்தில் உள்ள பாரதியார் இல்லம் ரூ.65 லட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்: அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தகவல்






சென்னை, மார்ச்.28
சட்டப்பேரவையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்தில் கோவில்பட்டி கடம்பூர் ராஜு (அதிமுக) பேசியதாவது: பாரதியார் வீட்டின் மேற்கூரை நேற்று இடிந்து விழுந்திருக்கிறது. அதை செய்தி துறை அமைச்சர் கவனித்து, அந்த நினைவு இல்லம் மட்டுமல்லாமல், அனைத்துத் தலைவர்களுடைய நினைவு மண்டபங்களையும் சிறப்பாகப் பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன்: எட்டயபுரத்தில் உள்ள பாரதியார் இல்லம் 100 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்டது. எனவே, அதனை புதுப்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏறத்தாழ ரூ.65 லட்சம் மதிப்பீட்டில் அந்த கட்டிடம் புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. விரைவில் அந்த பணி மேற்கொள்ளப்படும். இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## கிரஷர் உரிமையாளர்கள் தன்னிச்சையாக ஜல்லி மற்றும் எம்சாண்ட் விலையை உயர்த்தினால் கடும் நடவடிக்கை: அமைச்சர் எ.வ.வேலு எச்சரிக்கை

தமிழக சட்டப் பேரவையில் நேற்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு திருத்துறைபூண்டி மாரிமுத்து (இந்திய கம்யூனிஸ்ட்) பேசியதாவது: கடந்த 3 ஆண்டுகளாக ஒன்றிய அரசு வெறும் ரூ. 86 ஆயிரம் கோடியைத்தான் 100 நாள் வேலை திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிறது. எனவே, தமிழக அரசு எழுதிய கடிதத்தை, ஒன்றிய அரசு உள்வாங்கி உடனடியாக 100 நாள் வேலைத் திட்டத்தை கிராமப்புறங்களில் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். திருத்துறைப்பூண்டி போன்ற குக்கிராமங்களில் உள்ள சாமானிய ஏழை, எளியவர்கள் 6 மாதகாலமாக உழைத்திருக்கிறார்கள்.

அவர்களுக்கு இன்னும் 100 நாள் வேலை திட்டத்தில் பணம் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை. தமிழ்நாடு முழுவதும் இதேநிலை தான் இருக்கிறது. தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் போன்ற மாவட்டங்களில் அடிப்படையான பணிகளை செய்யத் தேவையான ஜல்லி மற்றும் எம்சாண்ட் புதுக்கோட்டை அல்லது கரூரிலிருந்து தான் வர வேண்டும். ஆனால், இன்றைக்கு கலைஞர் வீடு கட்டும் திட்டமாக இருந்தாலும், சாலை வசதிகளாக இருந்தாலும் சரி, கடந்த 2 மாதங்களாக அது நின்றுபோய் இருக்கிறது. அதற்கு காரணம், ரூ.2,000க்கு ஒரு யூனிட் கொடுத்தவர்கள், உடனடியாக அதை இருமடங்காக உயர்த்தி விட்டார்கள். அமைச்சர் எ.வ.வேலு: எல்லா மாவட்டங்களிலும் இந்தப் பிரச்னைஇல்லை. ஒரு குறிப்பிட்ட மாவட்டங்களில் கிரஷர் முதலாளிகள் ஒரு கூட்டமைப்பு ஏற்படுத்தி கொண்டு, இது போன்று விலைகளை ஏற்றியுள்ளனர். இதுஅரசுக்குத் தெரிந்த உடனே முதல்வர் கவனத்துக்கு கொண்டு சென்று முதல்வர், தலைமை செயலாளரை அழைத்து, நேரடியாக அந்த கலெக்டரிடத்தில் கடந்த வாரம் பேசப்பட்டிருக்கிறது. இப்படி விலைகளை ஏற்றுவார்களேயானால் அரசு கடும் நடவடிக்கை எடுக்கும்.

## ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் தீ



ஸ்ரீவில்லிபுத்தூர், மார்ச்.28
விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் பேருந்துநிலையம்அருகே அரசு மருத்துவமனை உள்ளது. இங்கு தினமும் வெளி நோயாளியாக சுமார் 1,400க்கும் மேற்பட்டோர் வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். 150 பேர் தங்கி சிகிச்சை பெறுகின்றனர். மருத்துவமனை வளாகத்தின்ஒருபகுதியில் மாத்திரை, மருந்து குடோன் உள்ளது.

இந்த குடோனில் நேற்று மாலைதிடீரெனதீவிபத்து ஏற்பட்டது. தகவலறிந்து தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைத்தனர்.

தீ உடனே அணைக்கப்பட்டதால் ரூ.10 லட்சம் மதிப்புள்ள மருந்து, மாத்திரைகள் தப்பின. மின் கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

28.3.2025

## சாலையில் ராட்சத பள்ளங்கள்: பார்வதிபுரத்தில் விபத்து அபாயம்



நாகர்கோவில், மார்ச்.28

கன்னியாகுமரி முதல் திருவனந்தபுரம் வரை உள்ள சாலையின் கட்டுப்பாடு தேசிய நெடுஞ்சாலைதுறை, மாநில நெடுஞ்சாலைத்துறையில் உள்ளது. இதனால் ஒரு துறை சாலையை பராமரிக்கும்போது சில பகுதி குண்டும் குழியுமாக இருப்பதை நாம் பார்க்க முடிகிறது. இந்த சாலையை ஒரு துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. கன்னியாகுமரி முதல் களிக்காவிளை வரை உள்ள சாலையில் பல பகுதிகளில் மரணகுழிகளாக பள்ளங்கள் உள்ளன. இதனால் இரு சக்கர வாகனங்களில் செல்பவர்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். இந்த சாலையில் பார்வதி புரம் உள்ளது.

மாவட்டத்தின் மேற்கு பகுதியில் இருந்து வருபவர்களுக்கு பார்வதிபுரம் நாகர்கோவில் மாநகர பகுதியின் நுழைவாயிலாக உள்ளது.

இந்த பகுதியில் மேம்பாலத்தின் கீழ் பகுதி வழியாக நாகர்கோவில், கன்னியாகுமரிக்கு வரும் பேருந்துகள், மினி பேருந்துகள் இயக்கப்படுகிறது. மேலும் பல்வேறு கிராம புறங்களில் இருந்து வரும் சாலைகளும் பார்வதிபுரத்தில் இணைகிறது. இதனால் பாலத்தின் கீழ் பகுதியில் அதிகமாக வாகனங்கள் இயக்கம் நடந்து வருகிறது. வாகனங்கள் அதிகமாக வருவதால், சாலைகளில் பல இடங்களில் ராட்சத பள்ளங்கள் ஏற்பட்டுள்ளது. சில பள்ளங்களை தற்காலிக முறையில் சீர்செய்யுதம் மீண்டும் மீண்டும் அதே இடத்தில் பள்ளங்கள் ஏற்படுகிறது.

இதனால் வாகன ஓட்டிகள் பலத்த சிரமத்திற்கு அளாகி வருகின்றனர். மேலும் பள்ளங்களால் விபத்துகளும் ஏற்படும் நிலை உள்ளது. மழைகாலத்தில் மேம்பாலத்தின் இருந்து மழைநீர் ஒரு குறிபிட்ட இடங்களில் கீழ் பகுதியில் உள்ள சாலையில் கொட்டுவதால் சாலைகள் சேதமாகி வருகிறது என நெடுஞ்சாலைதுறை அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கு நிரந்தர தீர்வு ஏற்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினர்.

## சதுரகிரி மலைப்பாதையில் சிறகடிக்கும் அரிய வகை இலங்கை வண்ணத்துப்பூச்சி



மதுரை: மதுரை மாவட்டம், பேரையூர் தாலுகாவில் வாழைத்தோட்டம் என்னும் மலைப்பகுதி உள்ளது. இப்பகுதி வழியாக சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோயிலுக்குச் செல்லலாம். கடந்த பிப்ரவரி மாதம் இந்த வழியாகச் சென்ற மதுரை இயற்கை பண்பாட்டு குழுவினர், கோயிலுக்கு செல்லும் மலைப் பாதையில் அரியவகை ‘இலங்கை ஐந்து வளையன் என்னும் வண்ணத்துப்பூச்சி’ இருப்பதைப் பார்த்து ஆவணம் செய்துள்ளனர். இது குறித்து குழுவின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான ச.குமரேசன் கூறியதாவது: மதுரை இயற்கை பண்பாட்டு அறக்கட்டளை தொடர்ச்சியாக மதுரையின் பல்வேறு பகுதிகளுக்கு சென்று களஆய்வு செய்து, மாவட்டத்தின் பல்லுயிரியச் சூழலை ஆவணம் செய்து வருகிறது. இதன் நீட்சியாக கடந்த மாதம், சதுரகிரி மலைப்பாதையில் ‘இலங்கை ஐந்து வளையன் வண்ணத்துப்பூச்சியை பார்த்து ஆவணம் செய்தது.

இந்த வண்ணத்துப்பூச்சி இலங்கை மற்றும் தீபகற்ப தென்னிந்திய பகுதிகளில் மட்டும் காணப்படும். இது ஒரு அரிய வகை உயிரினமாகும். பொதுவாக இவை புல்வெளிகள் நிறைத்த மலைப்பகுதிகளில் காணப்படும். கோவை, ஈரோடு மாவட்ட வனப்பகுதியிலும், மேகமலை வனப்பகுதியிலும் ஏற்கனவே ஆவணம் செய்யப்பட்டுள்ளது. சதுரகிரி மலைப்பாதையில் கடந்த மாத இறுதியில் மஞ்சள் கறுப்புச் சிறகன், வரி ஐந்து வளையன், மலபார் புள்ளி இலையொட்டி, சிறு கரு மஞ்சள் துள்ளி, மரபழுப்பன், பெருங்கண் புதர் பழுப்பு வண்ணத்துப்பூச்சி உள்ளிட்ட 52 வகையான வண்ணத்துப்பூச்சிகளை ஆவணம் செய்தோம். சதுரகிரி மலை ஆன்மீகத் தளம் மட்டுமல்ல, அது ஒரு பல்லுயிரி பசுமைத்தளம் என்பதற்கான சான்றாகும். மதுரை மாவட்டத்தில் இதுவரை 164 வகை வண்ணத்துபூச்சிகளை எங்கள் குழுவினர் ஆவணம் செய்துள்ளனர்.

வண்ணத்துபூச்சிகள் இயல்தாவரங்கள்சுற்றுச்சூழலுக்கு இடையே உள்ள உறவை மாணவர்கள், பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில், இயல் தாவர வண்ணத்து பூச்சிகள் பூங்கா ஒன்றை மதுரையில் ஏற்படுத்த வேண்டும். இது தொடர்பாக மதுரை மாவட்ட ஆட்சியருக்கும், வன அலுவலருக்கும் கோரிக்கை மனு கொடுத்து இருக்கிறோம்’ என்றார்.

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சமுக நலத்துறை செயலாளர் ஆஜராக சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

சென்னை, மார்ச்.28

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சமுக நலத்துறை செயலாளர் ஆஜராக சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கருணை அடிப்படையில் பெண் வாரிசுகளுக்கு மட்டுமே அங்கன்வாடி ஊழியர் பணி வழங்க முடியும் என விக்ரம் என்பவரது மனு நிராகரிக்கப்பட்டத்தை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில்வழக்குதொடர்ந்தார். இந்தமனுவை விசாரித்த ஐகோர்ட், விக்ரமுக்கு பணி வழங்குவது பற்றி 8 வாரங்களில் முடிவெடுக்க உத்தரவிட்டிருந்தது.

## மழை இல்லாததால் நீர்வரத்து இல்லை: தேனி மாவட்டத்தில் நீர்மட்டம் குறைந்து வரும் அணைகள்



தேனி, மார்ச்.28

தேனி மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால், பெரும்பாலான அணைகளில் நீர்வரத்து இல்லாமல், நீர்மட்டம் குறைந்து வருகிறது. வைகை, பெரியாறு அணைகளுக்கு மிகக்குறைந்த அளவிலே நீர்வரத்து உள்ளது. தேனி மாவட்டத்தில் தென் மேற்கு, வடகிழக்கு பருவமழை காலங்களில், அதிக மழைப் பொழிவு இருந்ததால் அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்து அனைத்து அணைகளும் முழு கொள்ளளவை எட்டி நிரம்பி வழிந்தன. இதனால் அனைத்து அணைகளில் இருந்தும் பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்காக தொடர்ச்சியாக தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த நிலையில் ஜனவரி மாதத்திற்குப் பின்பு தேனி மாவட்டத்தில் குறைந்த மழைப்பொழிவே இருந்தது. இதனால், அணைகளுக்கு நீர்வரத்து படிப்படியாகக் குறைந்து தற்போதுதண்ணீர்வரத்து இல்லாத சூழல் ஏற்பட்டுள்ளது. மேலும் அணைகளின் நீர்மட்டமும் வேகமாகக் குறைந்து வருகிறது.

ஆண்டிபட்டி அருகே, 71 அடி உயரமுள்ள வைகை அணையின் நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 58.5 அடி. நீர்வரத்து வினாடிக்கு 181 கனஅடி. நீர்திறப்பு 72 கனஅடி. நீர் இருப்பு 3324 மில்லியன் கன அடி. 57 அடி உயரமுள்ள மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 31 அடி. அணைக்கு நீர்வரத்து இல்லை. நீர் வெளியேற்றம் இல்லை. நீர் இருப்பு 85.48 மில்லியன் கன அடி. 126.28 அடி உயரமுள்ள சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 67.40 அடி. நீர்வரத்து இல்லை. நீர்திறப்பு 3 கன அடி. நீர்இருப்பு 27.97 மில்லியன் கனஅடி. 52.55 அடி உயரமுள்ள சண்முகநதி அணையின் நீர்மட்டம் 34 அடி. நீர்வரத்து இல்லை. நீர்வெளியேற்றம் இல்லை. நீர்இருப்பு 31.08 மில்லியன் கன அடி.

பெரியாறு அணைக்கு குறைந்த நீர்வரத்து

152 உயரமுள்ள பெரியாறு அணையின் நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 113 அடி. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 127 கனஅடி. அணையில் இருந்து நீர் வெளியேற்றம் 105 கன அடி. நீர் இருப்பு 1,392 மில்லியன் கன அடி.

## ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் தக்காளி விலை கடும் வீழ்ச்சி: விவசாயிகள் கவலை

ஒட்டன்சத்திரம், மார்ச்.28

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் பிரசித்தி பெற்ற காந்தி காய்கறி மார்க்கெட் உள்ளது. இப்பகுதியில் விவசாயிகள் தாங்கள் பயிரிடும் காய்கறிகளை இந்த மார்க்கெட்டுக்கு கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். இவற்றை உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் வாங்கி சென்று மொத்தம் மற்றும் சில்லறையாக விற்பனை செய்கின்றனர். இந்நிலையில், ஒட்டன்சத்திரம் பகுதியில் உள்ள தேவதத்தூர், அம்பிளிக்கை, கள்ளிமந்தையம், சத்திரப்பட்டி, விருப்பாச்சி, வடகாடு, பால்கடை, பெத்தேல்புரம், கண்ணனூர் உள்ளிட்ட கிராமங்களில் சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்ட தக்காளி, தற்போது அறுவடைக்கு வந்துள்ளது.

இதனால், ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வரத்து அதிகரித்துள்ளது. தவிர கர்நாடகா, ஆந்திராவை சேர்ந்த வியாபாரிகள், தங்களுக்கு தேவையான தக்காளியை உள்ளூரிலேயே கொள்முதல் செய்கின்றனர். வரத்து அதிகரித்த நிலையில், வியாபாரிகள் வரத்து குறைந்ததால், தக்காளி விலைகடுமையாகவீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த வாரம் 14 கிலோ தக்காளி பெட்டி ரூ.100 முதல் 150 வரை விற்பனையானது. தற்போது ரூ.50 முதல் 80 வரையே விற்பனை செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகள் கவலைஅடைந்துள்ளனர்.

## 'பசூக்கா' படத்தின் டிரெய்லர் வெளியீடு




மலையாள சினிமாவின் முன்னணி நட்சத்திர நடிகர்களுள் ஒருவர் மம்முட்டி. இவரது நடிப்பில் 'டோமினிக் அண்ட் தி லேடிஸ் பர்ஸ்' என்ற படம் வெளியானது. ஆனால் இப்படம் எதிர்பார்த்த அளவில் வெற்றியடையவில்லை. அதனை தொடர்ந்து தற்போது புதுமுக இயக்குனரான டீனோ டென்னிஸ் இயக்கியுள்ள பசூக்கா என்ற படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தில் காயத்ரி ஐயர் மற்றும் கவுதம் வாசுதேவ் மேனன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

இந்த படத்திற்கு இசையமைப்பாளர் மிதுன் முகந்தன் இசையமைத்துள்ளார். மேலும், நிமிஷ் ரவி மற்றும் ராபி வர்கீஸ் ஒளிப்பதிவு செய்துள்ளனர். சமீபத்தில் இந்த படத்தின் டீசர் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் கவனத்தை பெற்றது. அதனை தொடர்ந்து இப்படம் வருகிற ஏப்ரல் 10ந் தேதி வெளியாக உள்ளது.

இந்த நிலையில், தற்போது இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி உள்ளது. இந்த டிரெய்லர் ரசிகர்களின் கவனத்தை பெற்று இணையத்தில் வைரலாகி வருகிறது.

## கிரிக்கெட் வீரர் கதாபாத்திரத்தில் நடிப்பது எளிது கிடையாது நடிகர் சித்தார்த்




மாதவன், சித்தார்த், நயன்தாரா, மீரா ஜாஸ்மின் ஆகியோர் இணைந்து சஷிகாந்த் இயக்கிய 'டெஸ்ட்' படத்தில் நடித்துள்ளனர். இதில் சித்தார்த் கிரிக்கெட் வீரர் கதாபாத்திரத்தில் நடித்து இருக்கிறார். இதுகுறித்து சித்தார்த் கூறும்போது, "நம் நாட்டில் கிரிக்கெட் என்பது வாழ்க்கை. யாரைக் கேட்டாலும் கிரிக்கெட் பிடிக்கும் என்பார்கள். நானும் அதில் ஒருவன்.

தினமும் பல மணி நேரம் கிரிக்கெட் பார்த்து, விளையாடி பலரும் அந்த விளையாட்டுடன் பழக்கமாகி இருப்பார்கள். அதனால், கிரிக்கெட் வீரராக வெறுமனே நடித்து ஒப்பேத்த முடியாது. டெஸ்ட் கிரிக்கெட் வீரர் கதாபாத்திரத்தில் நடிப்பது எளிது கிடையாது. நிறைய பேரிடம் இருந்து இன்ஸ்பையர் ஆகித்தான் கிரிக்கெட் வீரர் கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறேன்.

கிரிக்கெட் பார்க்கும்போது வரும் பதற்றம் இந்தப் படம் பார்க்கும்போதும் உங்களுக்கு வந்தால் அதுவே எங்களுக்கு வெற்றிதான். எனக்கு கிரிக்கெட் வீரர்களில் ராகுல் டிராவிட் பிடிக்கும்" என்றார்.

## வீர தீர சூரன் 2 படத்தை வெளியிட இடைக்கால தடை



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான விக்ரம் தனது 62வது படமான 'வீர தீர சூரன் 2' படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படத்தை சித்தா பட இயக்குனர் எஸ்.யு.அருண்குமார் இயக்கியுள்ளார். எச்.ஆர்.பிக்சர்ஸ் சார்பில் ரியா ஷிபு தயாரித்துள்ள இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா, சுராஜ் வெஞ்சராமுடு, துஷரா விஜயன், சித்திக் ஆகியோர் நடித்துள்ளனர்.

இந்த படத்தில் நடிகர் விக்ரம் கிராமிய தோற்றத்தில் 'காளி' என்ற கேங்ஸ்டர் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படத்திற்கு ஜிவி பிரகாஷ் இசையமைத்துள்ளார். பொதுவாகவே சினிமாவில் எந்த ஒரு படமும் முதல் பாகம் வெளியான பின்னர்தான் இரண்டாம் பாகம் வெளியாகும். ஆனால் இயக்குனர் அருண்குமாரை பொறுத்தவரை அவர் முதலில் 2ம் பாகத்தை இயக்கி வெளியிடுகிறார். அருண்குமாரின் இந்த வித்தியாசமான முயற்சி பாராட்டுக்குரியது. இதனால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே அதிகரித்துள்ளது.

இப்படம் நாளை வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், வீர தீர சூரன் 2 வெளியாவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதாவது, இப்படத்திற்கு மும்பையை சேர்ந்த B4U என்ற தயாரிப்பு நிறுவனமும் பண முதலீடு செய்திருக்கிறது. அதனால் அந்த நிறுவனத்திற்கு இப்படத்தின் டிஜிட்டல் உரிமையை தயாரிப்பாளர் எழுதி கொடுத்துவிட்டாராம். ஆனால் ஒப்பந்தத்தில் உள்ளபடி இன்னும் படம் ஓ.டி.டி உரிமை விற்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. அதற்குள் படம் வெளியாக தயாராகிவிட்டது. ரிலீஸ் தேதி அறிவித்ததால் படத்தை ஓ.டி.டி.யில் விற்க முடியவில்லை.

இதனால் மும்பை சேர்ந்த B4U நிறுவனம் முதலீடு செய்த தொகையில் 50 சதவீதம் நஷ்டயீடு வழங்க வேண்டும் என டெல்லி ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது. இதனை விசாரித்த டெல்லி ஐகோர்ட்டு படத்தை வெளியிட இடைக்கால தடை விதித்துள்ளது.

## கிரிக்கெட் என்று சொல்வதற்கு பதில் பேட்டிங் என்று சொல்லுங்கள் ரபாடா



ஐ.பி.எல். தொடரில் அகமதாபாத்தில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. இந்த போட்டியில் முதலில் பேட்டிங் செய்த பஞ்சாப் கிங்ஸ் 20 ஓவர்களில் 5 விக்கெட்டை மட்டும் இழந்து 243 ரன்கள் குவித்தது. பஞ்சாப் தரப்பில் அதிகபட்சமாக ஸ்ரேயாஸ் ஐயர் 97 ரன்கள் எடுத்தார்.

தொடர்ந்து 244 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த குஜராத் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டை இழந்து 232 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 11 ரன் வித்தியாசத்தில் பஞ்சாப் கிங்ஸ் திரில் வெற்றி பெற்றது. குஜராத் தரப்பில் அதிகபட்சமாக சாய் சுதர்சன் 74 ரன்கள் எடுத்தார். இந்தபோட்டியில்ஆட்டநாயகன்விருதுஸ்ரேயாஸ்ஐயருக்குவழங்கப்பட்டது.

இந்த சீசனில் தற்போது வரை 5 போட்டிகள் நடைபெற்றுள்ளது. இதில் 3 போட்டிகளில் 200க்கும் அதிகமான ரன்கள் குவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த போட்டியை கிரிக்கெட் என்று சொல்வதற்கு பதிலாக பேட்டிங் என்று சொல்லலாம் என தென் ஆப்பிரிக்கா அணியின் வீரரும், குஜராத் அணியின் வீரருமான ரபாடா கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது,

ஒவ்வொரு மைதானமும் பிளாட் பிட்ச்சாக உள்ளது. போட்டியை சுவாரஸ்யமாக கொண்டு செல்வதற்காக இப்படி பிளாட் பிட்ச் அமைக்கப்படுகிறது. இதனால் இந்த போட்டியை இனிமேல் கிரிக்கெட் என்று கூறாதீர்கள், பேட்டிங் என்று சொல்லுங்கள்.

அது தான் சரியாக இருக்கும். சில சாதனைகள் முறியடிக்கப்படுவதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், பேட்டிங் மற்றும் பந்துக்கு இடையில் ஒரு சமநிலை இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஸ்ரேயாஸ் எடுத்த அந்த முடிவுதான் வெற்றிக்கு காரணம் பாண்டிங் பேட்டி



ஐ.பி.எல். தொடரில் அகமதாபாத்தில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. இந்த போட்டியில் முதலில் பேட்டிங் செய்த பஞ்சாப் கிங்ஸ் 20 ஓவர்களில் 5 விக்கெட்டை மட்டும் இழந்து 243 ரன்கள் குவித்தது. பஞ்சாப் தரப்பில் அதிகபட்சமாக ஸ்ரேயாஸ் ஐயர் 97 ரன்கள் எடுத்தார்.

தொடர்ந்து 244 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த குஜராத் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டை இழந்து 232 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 11 ரன் வித்தியாசத்தில் பஞ்சாப் கிங்ஸ் திரில் வெற்றி பெற்றது. குஜராத் தரப்பில் அதிகபட்சமாக சாய் சுதர்சன் 74 ரன்கள் எடுத்தார். இந்த போட்டியில் ஆட்டநாயகன் விருது ஸ்ரேயாஸ் ஐயருக்கு வழங்கப்பட்டது.

இந்த ஆட்டத்தில் பஞ்சாபின் இம்பேக்ட் பிளேயராக வேகப்பந்து வீச்சாளர் வைஷாக் விஜயகுமார் களம் இறங்கினார். அவர் 3 ஓவரில் 28 ரன் மட்டுமே விட்டுக்கொடுத்து அணியின் வெற்றிக்கு மிக முக்கிய பங்காற்றினார். அவர் வீசிய முதல் இரண்டு ஓவர்களில் 10 ரன்களையும், மூன்றாவது ஓவரில் 18 ரன்கள் என மூன்று ஓவர்களில் 28 ரன்கள் மட்டுமே கொடுத்ததால் பஞ்சாப் கிங்ஸ் அணி வெற்றி பெற்றது.

இந்நிலையில் இந்த போட்டி முடிந்த பின்னர் பஞ்சாபின் தலைமை பயிற்சியாளர் ரிக்கி பாண்டிங் அளித்த பேட்டியில் கூறியதாவது, நான் இந்த போட்டியின் கடைசி கட்டத்தில் ஓய்வறையில் தான் உட்கார்ந்து கொண்டிருந்தேன். குஜராத் அணியின் வெற்றிக்கு ஒரு கட்டத்தில் ஓவருக்கு 14 ரன்கள் தேவைப்பட்டபோது என்ன செய்யலாம் என ஷ்ரேயாஸ் ஐயரிடம் கேட்டேன்.

அதற்கு அவர் வைசாக் விஜயகுமாரை இம்பேக்ட் பிளேயராக அனுப்புங்கள் அவர் வந்தால் சரியாக இருக்கும் என்றார். ஏனெனில், கடைசி கட்டத்தில் அவரால் யார்க்கர் பந்துகளை வீசி போட்டியை கட்டுக்குள் கொண்டுவர முடியும் என்று கூறினார். அவர் சொன்னபடியே வைஷாக் விஜயகுமாரை நாங்கள் உள்ளே அனுப்பினோம். அவர் சிறப்பாக பந்துவீசினார். பின்னர் எங்களால் போட்டியில் வெற்றி பெறவும் முடிந்தது. இவ்வாறு அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.